REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 29வ செவ்வாய் (11—6—57) ★ வெளியூர்: வைகாசி 30வ புதன் (12—6—57) [இதழ் 310

எதிர்காலம் எப்படியோ?

கோலாலம்பூர், ஜுன் 11—

மலேயா பெடரேஷன் சர்க்கார் புதிதாக 6 சத தபால் தலை ஒன்றினை வெளியிட்டிருக்கிறார்கள்; அதில் ஒரு மலாயரும் ஒரு சீனரும் கள் இறக்குவது போன்று படம் போட்டிருக்கின்றனர்; ஆனால் கள் இறக்குவோரில் 80 சதவிகிதத்தினராக தமிழர்கள் இருக்கின்றனர். அவர்களது உருவம் தபால் தலையில் இடம் பெறவில்லை.

சர்க்காரின் இந்தச் செயலை, அவர்கள் வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்:

மூன்றாண்டுகளில் தோல்வியுறும்?

தாங்க முடியாத பளுவை மக்கள்மீது சுமத்தலாமா?

மூன்று வேளை உணவுக்கே வழியில்லை; உடல் வலிவுக்கு 'டானிக்' தருவது ஆபத்தானதல்லவா?

சென்னைக் கூட்டத்தில் அண்ணா எச்சரிக்கை

"உலகத்தில் எந்த நாட்டிலும் திட்டங்களைப் போடுகின்றவர்கள், திட்டங்களை மக்கள் தாங்குவார்களா என்று பார்த்துத்தான் தயாரிப்பார்களே தவிர, தங்கள் எண்ணத்திற்குத் திட்டங்களைப் போடமாட்டார்கள்.

"டாக்டரிடத்தில் நீங்கள் போய், என்னுடைய உடம்புக்கு 'டானிக்' தாருங்கள் என்று கேட்டால், நல்ல டாக்டராயிருந்தால், முதற் கேள்வி கேட்பது, "நீ மூன்று வேளையும் வயிறார சாப்பிடுகிறாயா?' என்பதுதான்! 'நான் மூன்று வேளையும் வயிறார சாப்பிடுவதில்லை; அதற்குப் பணமில்லை; ஆனால், வலிவு ஏற்படுவதற்கு டானிக் கொடு' என்று கேட்டால், 'டானிக்' அல்லவா ஆளைக் கொன்றுவிடும்?

"அதைப்போல, இந்திய ஆட்சியினர் போடும் திட்டம் இருக்கின்றதே, அதைப்பற்றி இன்றையத்தினம் நான் சொல்லுவதை காங்கிரஸ்காரர்கள் கோபத்தோடு கேட்டாலும் ஆழ மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டும். இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், முதல் மூன்று வருடத்திலேயே தோல்வியடைந்தது என்று அவர்களே ஒப்புக்கொள்ளப் போகிறார்கள். அந்த அளவுக்குத் தாங்க முடியாத பளுவை நாட்டிலே இன்றையத்தினம் அவர்கள் ஏற்றி இருக்கின்றார்கள். தாங்க முடியாத பளுவை ஏற்றிவைப்பது, வயிற்றுக்கு உணவில்லாதவனுக்கு 'டானிக்' கொடுப்பதைப் போலாகும்."

—என்று அண்ணா அவர்கள் நேற்று நடைபெற்ற சென்னை 38-வது வட்ட தி. மு. கழக முதலாவது ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அண்ணா அவர்கள் பேசியதாவது:—

"பெரிய பெரிய அணைக்கட்டுத் திட்டங்களும், பிரும்மாண்டமான கட்டிடங்களும் என் நேரு கட்டுகின்றார்? அது மனித சுபாவத்திலே ஒன்று!

"நாமெல்லாம்கூட சர்க்கஸ் வருகின்ற நேரத்திலே சர்க்கசைப் பார்த்துவிட்டு, சர்க்கசிலே இருக்கிறவன் எப்படி எப்படி சைக்கிள் விடுகிறானோ அப்படி சைக்கிள் விடலாமென்றுதான் நமக்குத் தோன்றும். ஆனால் அதையெல்லாம் சர்க்கசிலே பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கும். நாமும் அதைப்போல செய்ய ஆரம்பித்தால் உண்மையிலேயே கீழே விழுந்து பல் உடைந்துபோகும்.

"நேரு பண்டிதர் வெளிநாடுகளுக்கெல்லாம் போகிறார் அல்லவா—பல சர்க்கஸ் பார்ப்பது போலவே — பல இடங்களைப் பார்க்கிறார்.

"அமெரிக்க நாட்டிலே பார்த்தால் பிரும்மாண்டமான அணைக்கட்டுகள் இருக்கிறது; அகலக் கண்களைத் திறந்து அங்குள்ள அதிகாரிகளை நேரு கேட்கிறார்— 'இது என்ன அணைக்கட்டு?'

"'இதுதான் தென்னஸ்வலி வேலி'!

"'ஓகோ! தென்னஸ்வலிவேலியா? — (இதைப்போல நம்முடைய ஊரிலே போனதும்...!) அது என்ன?'

"'அது, எங்கள் சர்க்கார் அதிகாரிகள் ஞாயிற்றுக் கிழமைகளில் பொழுது போக்குவதற்குள்ள கட்டிடம்'!

"'அடேயப்பா! ஞாயிற்றுக் கிழமைக்கு இந்தக் கட்டிடமா? அங்கு என்ன இருக்கிறது?'

"'அங்கு நீந்துவதற்கு அலங்காரத் தடாகமிருக்கிறது; உள்ளே படிப்பதற்கு நல்ல படிப்பகமிருக்கிறது; விளையாடுவதற்கு பந்தாட மைதானமிருக்கிறது'!

"'என்ன செலவு'?

"'இதற்கு 28 கோடி டாலர்'!

"'எத்தனை அடுக்கு'?

"'32 அடுக்கு'!

"'32 அடுக்கா'? — (இதைப் போல டில்லிக்குப் போனதும்...)

"என்று, இப்படி சர்க்கசைப் பார்த்துவிட்டு வருவதையெல்லாம் இங்கே வேண்டுமென்று கேட்டால்—'நீங்கள் பார்க்கிற நாட்டிலே உள்ள மக்கள் அத்தனை பேரும் மூன்று வேளை வயிறார சாப்பிடுகிறார்களே! முதலிலே சோறு போடுங்கள்; அதற்குப் பிறகு 'டானிக்' கொடுங்கள்; முதலிலே குடியிருப்பதற்கு வீடுகளைக் கட்டு! அதற்குப் பிறகு கழுத்து வலிக்க வலிக்க அண்ணாந்து பார்க்கிற அளவுக்கு மாளிகைகள் கட்டு,' என்று எடுத்துச் சொல்வதற்கு இந்த நாட்டிலே வக்கு இல்லை—வழி இல்லை—நாதியில்லை. அதனாலேதான் அப்படிக் கட்டிக் கொண்டு போகின்றாரே தவிர, அவரைக் கெட்டவர் என்று யாரும் சொல்லவில்லை.

"பல தோழர்கள், நேரு பண்டிதரைப் பற்றி என்ன சொன்னாலும், என்னுடைய ஆழ்ந்த கருத்து—அவரைப் பற்றி—அவர் மிக நல்லவர்!

"மிக நல்லவராக இருக்கின்ற காரணத்தாலேதான் அவர் எந்தக் காரியத்தைச் செய்தாலும், அதிலே குற்றங்குறைகளை யாராவது சொன்னால் அவருக்கு மெத்த கோபம் வருகிறது.

"நான் ஒரு சமயம் இரயிலிலே போகின்ற நேரத்தில், ஒரு வயோதிகரை பார்த்தேன்; அந்த வயோதிகர் இரயிலே உட்கார்ந்து கொண்டு பிளாட்பாரத்திலே விற்கும் கடலை சுண்டலை வாங்கினார்; வாங்குகிற நேரத்தில் ஒரு கையிலே வாங்கினால் கீழே விழுந்துவிடும் என்ற பந்தோபஸ்து உணர்ச்சியினால் இரண்டு கையையும் நீட்டி வாங்குகிற நேரத்தில், சன்னல் சம்பியில் இருந்த கட்டையைக் கவனிக்காமல் கட்டைக்கு வெளியே (கட்டை நடுவில் பக்கத்திற்கு ஒரு கையாக) கையை நீட்டிவாங்கினார்; சுண்டல் கொடுத்தாகிவிட்டது; சுண்டல் கீழே கொட்டிவிடுமென்ற பாதுகாப்பு உணர்ச்சியோடு இரண்டு கையும் நீட்டியவரையிலே அவர் அறிவாளி! ஆனால், வாங்கியானப் பிறகு கையை எடுக்கவேண்டுமே! எடுத்தால்—கைகள் நீங்கினால் சுண்டல் கீழே விழுந்துவிடும்; கையை நீக்காவிட்டால் கைகள் உள்ளே வராது அல்லவா?

"அதைப்போல இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே — சுண்டல் கடலை வாங்குவதற்கு கையை நீட்டுவதுபோல்-பண்டித நேரு, அகலக் காலை வைத்துவிட்டார்; மறுபடியும் திருப்பி எடுக்க வேண்டுமென்றால் முடியவில்லை. 'நீங்களெல்லாம் வரிகொடுங்கள் - வரி கொடுங்கள்' என்று கேட்கின்றாரே. தவிர, அவர் என்னவோ நல்லவர்தான்—கெட்ட எண்ணத்தோடு உள்ளவர் அல்ல!

"நல்லவர்கள் தவறு செய்தால் தான் நிரம்பவும் கெடுதலாக முடியும்; போக்கிரிகள் கெடுதல் செய்தால் அவ்வளவு கெடுதல் வராது. ஏனென்றால் போக்கிரிக்கு எப்பொழுது செய்யவேண்டுமென்று தெரியும்; நல்லவர்களுக்குத்தான் எப்பொழுது செய்யவேண்டுமென்று தெரியாது; செய்துவிட்டு சிக்கிக் கொள்கிறார்கள். சிக்கிக்கொண்ட காரணத்தாலேதான் அவரைப் போற்றிக்கொண்டிருந்த ஸ்ரீமன் நாராயணனே-காங்கிரஸ் கட்சிக்குச் செயலாளராக இருக்கிறவரே இந்த வரித் திட்டத்தைக் கண்டிக்கிறார்.

"இத்தனைக்கும் பிறகு என்ன பதில் சொல்லியிருக்கிறார் நேரு? 'இவ்வளவுதூரம் போய்விட்டேன்; இதற்குப் பிறகு பின்னாலே வரமுடியாது' — என்று சொல்லியிருக்கிறார்.

"இதற்குப் பிறகு பின்னாலே வரமுடியாது என்றால், அதற்கு நான் சொல்லக்கூடியதெல்லாம்—பின்னாலே நாமாக வருவது என்றால் இப்பொழுது தான் முடியும்; இப்பொழுது பின்னாலே வரத் தவறி விட்டால், காலமும் — நிலைமையும் நம்மை பின்னாலே துரத்தும். காற்று அடிக்கிறபொழுதே சன்னல் கதவுகளை மூடினால் வீட்டில் உள்ள விளக்கு அணையாது; காற்று அடிக்கிறபொழுது சன்னலை மூடாவிட்டால், சன்னல் கதவு தானாக மூடிக்கொள்ளும்; விளக்கும் அணைந்துவிடும்.

"அதுபோல முதல் ஐந்தாண்டு திட்டத்திலேயும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்திலேயும் நாட்டு மக்கள் மீது தாங்கமுடியாத பாரம் ஏறியிருக்கிறதென்பதை, நல்ல பண்டிதர் இப்பொழுதே உணர்ந்து, அந்தத் திட்டத்தைக் கொஞ்சமாவது குறைத்துக்கொண்டு, 5 வருடத்திலே செய்யலாமென்பதை 10 வருடத்திலே செய்யலாமென்று திட்டத்தைத் திருத்தியமைத்து, அல்லது ரூ. 6,000 கோடி செலவழிக்கலாமென்பதை ரூ. 4,000 கோடியாகக் குறைத்து, செலவினுடைய அளவையாவது குறைத்து ஏதாவது ஒரு முறையிலே அவர் அதைச் சரிப்படுத்தினால்தான் தானாக பின்னுக்குத் திரும்பி வரமுடியும். இல்லையென்றால் உண்மையில் காலமும்—நிலைமையும் பின்னுக்குத்தான் துரத்தும்."

மராட்டியம் ஒரு 'சுதந்திரத் தனி நாடு'

சமிதித்தலைவர்கள் தெரிவித்த கருத்து

பி. சோ. கட்சியின் கண்டனம்

நாசிக், ஜுன் 10—

மராட்டியம் ஒரு சுதந்திரத் தனிநாடாக வேண்டும்' என்று, சம்யுக்த மராட்டிய சமிதியின் தலைவர்கள் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்படித் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு, சமிதியில் இடம் பெற்றிருக்கும், மராட்டிய பி. சோ. கட்சியினர் எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்திருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது.

"மராட்டிய பி. சோ. கட்சியின் விசேட மாநாடு ஒன்றில், சுதந்திர மராட்டியம் பற்றி சமிதித் தலைவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் கண்டனத்திற்குரியன; அத்துடன் அவை சமிதியின் ஒற்றுமைக்கும் ஊறுதேடுவனவாகும். சமிதியின் பெயரால் தேர்தல் பற்றி வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மொழிவழி தேசீயத்துவம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது இந்திய யூனியன்மீது நாம் காட்டும் விசுவாசத்திற்கு உலைவைப்பதாகும் என்பதுடன் சமிதியின் அடிப்படைக் கொள்கைளுக்கும் முரண்பாடானதாகும்; இந்தியா பல நாடுகளின் கரமன் வெல்த் அல்ல-மாறாக, ஒரு பெடரல் அமைப்பு கொண்ட பிரிக்கமுடியாத ஒரே நாடு என்று சமிதி ஏற்கனவே தெளிவாகத் தெரிவித்திருக்கிறது"

என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்.

கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ள இந்த மொழி தேசீயம் பற்றிய கருத்து, சம்யுக்த மராட்டிய சமிதியின் தேர்தல் கமிட்டித் தலைவர் என்ற முறையில் தோழர் எஸ். எ. டாங்கே வெளியிட்ட அறிக்கையில் காணக்கிடப்பதாகவும் கூறப்படுகிறது.

2,282 பேர் கைது

சோஷலிஸ்டுகள் போராட்ட எதிரொலி

இலக்குமணபுரி, ஜுன் 10—

சோஷலிஸ்டுகள் நடத்திவரும் போராட்டத்தில் இதுவரை 2,282 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 11—6—57 செவ்வாய்

இந்தி வெறியர்கள்

★

'இந்தி மொழிக்கு உரிய இடம் தேடல்' என்ற போர்வையின்கீழ் பஞ்சாப் சீக்கியர்களை வலிய வம்புக்கிழுக்கும் திருப்பணியைச் செய்ய பஞ்சாபில் உள்ள ஆரியசமாசத்தினர் முன்வந்துள்ளனர். அவ்வல்லடி வழக்குத் திருப்பணியில் காவி வேடத்திலுள்ள சில மொழி வெறியர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

பஞ்சாபில் உள்ள 'இந்தி ரக்சா சமதி'யின் சார்பில்தான் மேற்படி வம்பு துவக்கப்பட இருக்கிறது. அச்சமதியின் சார்பில் மேற்கொள்ளப்பட இருக்கின்ற நடவடிக்கைகளுக்கு, 'அறப்போர்' என அவர்கள் பீத்திக்கொள்கின்றனர். அதுவுமன்றி, சீக்கியர்களுக்கு ஆத்திரமளிக்கும் அச்செயலுக்கு, 'நல்லெண்ண தூது' என்றும்கூட அவர்கள் செப்பிக்கொள்ளுகின்றனர்.

பஞ்சாப் மாநிலத்தில் பஞ்சாப் மொழியே ஆட்சி மொழியாக இருந்தாக வேண்டும். அங்கு வாழ்ந்துவரும் இந்துக்களுக்கும் சரி, சீக்கியர்களுக்கும் சரி பஞ்சாப் மொழிதான் தாய்மொழியாகும். எனவே, பஞ்சாப் மொழிக்கு எதிராக 'இந்தி மொழிக்கு உரிய இடம் தேடல்' என்ற போர்வையில் செய்யப்படும் கிளர்ச்சி எதுவானாலும், அக்கிளர்ச்சிகளை எவர் துவங்குவதாக இருப்பதானாலும், அது கண்டிக்கத்தக்கதேயாகும். அக்கிளர்ச்சி இறுதியாகத் தோல்வியுறுவதும் நிச்சயமாகும். அதுவுமன்றி பஞ்சாபில் சீக்கியர்களுக்கும் — இந்துக்களுக்கும் இடையில் ஏற்கனவே இருந்துவரும் உட்பகையை, மேலும் விரிவுபடச் செய்வதிலேயே முடிவுறும்.

பஞ்சாப் மாநிலத்தை இந்தி மொழி வழங்கும் பகுதி என்றும், பஞ்சாபி மொழி வழங்கும் பகுதி என்றும் இரு பிரிவுகளாக ஏற்கனவே பிரிக்கப்பட்டு இருக்கிறது. இந்தி பகுதியில் இந்தி மொழி ஏற்றத்துடன் விளங்குவதும், பஞ்சாபி பகுதியில் பஞ்சாப் மொழி ஏற்றத்துடன் விளங்குவதும் எதிர்பார்க்கக்கூடியதேயாகும்.

மாநிலமுழுதும் என்றுமில்லாமல், குறிப்பிட்ட ஒரு பகுதியில் மட்டுமே பஞ்சாபி மொழி வழங்கி வருவதையுங்கூட, இந்திமொழிப் பற்றினரால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. அவர்களுடைய இந்திமொழி வெறி உச்சக் கட்டத்தை அடைந்துவிட்டிருக்கிறது.

குருமுகி எழுத்தில் எழுதப்பட்டுவரும் பஞ்சாபி மொழியை நிர்மூலமாக்கிவிட்டு, பஞ்சாப் முழுதிலும் தேவநாகிரி எழுத்தைக் கொண்ட இந்திமொழியைத் திணித்துவிட வேண்டும் என்ற உட்கருத்துடன்தான், மேற்படி வம்புச் சண்டை துவங்கப்பட்டு இருக்கின்றது என்பது தெளிவாகிறது.

இந்த இந்திமொழி வெறிச் சண்டைக்குக் காங்கிரசுத் தலைவர்கள் பலருடைய பின்பலமும் இருப்பதாகக் கூறப்படுகிறது. முன்னாள் பஞ்சாப் காங்கிரசு செயலாளரும், இம்மொழி வெறிப் போருக்கு முன்னணியில் இருந்துவருகிறார்.

இந்தி மொழி வெறியர்களின் வம்புச்சண்டை பஞ்சாப் மாநிலம் முழுதும் இப்பொழுது துவங்கப்படமாட்டாதாம். தலைநகரான சந்திகாராவில் மட்டும்தான் இம்மொழிச் சண்டை முதற்கண் மேற்கொள்ளப்படுமாம்.

இம்மொழி வெறி ஆதிக்கப் போருக்கான ஊழியர்கள் பல பகுதிகளிலிருந்தும் சந்திகாரா வருவார்களாம். இம்மொழி ஆதிக்கவெறியின் சண்டை முறைகள் இன்னமும் விளக்கப்படாமலே இருந்துவருகின்றன.

இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள அனைவருடைய ஒத்துழைப்பும், பக்கபலமும் இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையில்தான், ஆரிய சமாசிகள் மேற்படி இந்தி மொழி வம்பில் தலையிட்டு இருக்க வேண்டும். அவர்கள் நம்பிக்கொண்டு இருப்பது போல், இந்தி மொழியைத் தாய்மொழியாகக்கொண்டுள்ள மாநிலத்தார்கள், ஆரிய சமாசிகளின் மேற்படி இந்தி மொழி ஆதிக்க வெறிச் செயலுக்கு மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ துணைபோனாலும், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அவர்களிடம் அவ்வெறிச் செயல் எதிர்பார்க்கக் கூடியதேயாகும்.

பஞ்சாபில் ஆரிய சமாஜிகள் மேற்கொள்ள முன்வந்துள்ள வம்புச் செயல்களின் விளைவு, அவர்கள் எதிர்பார்ப்பதற்கு நேர்விரோதமாகவே அமையக் கூடும்.

இன்று பஞ்சாபில் தான் பெற்றுள்ள இடத்தையும், இந்த மொழி ஆதிக்கச் சண்டையின் காரணமாக இந்தி இழந்துவிடப் போவது நிச்சயத்திலும் நிச்சயமாகும்.

ஆனால், ஒரு பலனை மட்டும் இச்சண்டையிலிருந்து நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். அதாவது, சீக்கியர்களுக்கும்-இந்துக்களுக்கும் இருந்துவரும் மனக்கசப்பு மேலும் முற்றி, விபரீதத்தில் முடிவுபெறும் என்பதேயாகும்.

பஞ்சாபில் இந்தி ஆதிக்கக்காரர்கள் தொடுத்துள்ள வல்லடி வழக்கு நமக்கு ஒரு படிப்பினையாக அமைந்திருக்கின்றது. அவர்களுக்குள்ள மொழிவெறியே நாம் உணர்ந்துகொள்ள வேண்டிய படிப்பினையாகும்.

1000 ஆரம்பப்பள்ளிகள்

ஆதாரப் பள்ளிகளாக மாறும்?

மதுரை, ஜுன் 8—

நடைமுறை ஆண்டில் 1,000 ஆரம்பப் பள்ளிகள் ஆதாரப் பள்ளிகளாக மாற்றப்படும் என்றும், கைத்தொழில் சம்பந்தமான கருவிகள் வாங்க ரூ. 8 இலட்சம் அரசாங்கம் அனுமதித்துள்ளதாகவும் மதுரை பகுதி கல்விப் பரிசோதகர் மகமத்கனி தெரிவித்துள்ளார்.

இந்தி மொழி ஆதிக்க முயற்சி

பஞ்சாபி மொழிக்கு எதிராகப் 'போர்க்கோலம்'

'காஷாயதாரி'களும் கிளர்ச்சியில் ஈடுபடுகின்றனர்

"பஞ்சாப் மாகாணத்தில் இந்திமொழி ஆதிக்க வல்லாட்சியாளர்கள் தீவிர இயக்கம் தொடங்கியுள்ளார்கள் என்று ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது.

"ஆரிய சமாசத்தைச் சேர்ந்தவர்களால் இது தொடங்கப்பட்டாலும், காங்கிரசு மேலிடத் தலைவர்கள் சிலருடைய தூண்டுதலே இவ்வியக்கத்திற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

"பஞ்சாப் மாகாணக் காங்கிரசுக் குழுவின் பொதுச்செயலாளராயிருந்த திரு. வீரேந்திரா இதன் தலைவர்களுள் ஒருவராக இருப்பதாலும், வேறு சில காரணங்களாலும், காங்கிரசுத் தலைவர் பின்னணியிலிருந்து பஞ்சாபி மொழிக்கு எதிரிடையாகவும், இந்தி மொழிக்கு ஆதரவாகவும் இயக்கத்தை நடத்திவருகிறார்களென்று நினைக்க இடமிருக்கிறது.

"காவி உடையுள்ள சன்னியாசிகளை இம்மொழி ஆதிக்க முயற்சிக்காகப் பயன்படுத்திவருவது பெரிதும் வருந்தத்தக்கது. எப்படியாவது குருமுகி எழுத்தில் எழுதப்படும் பஞ்சாபி மொழியை ஒழித்துவிட்டு, தேவநாகரி எழுத்தில் எழுதப்படும் இந்தி மொழியையே மாகாணப் பொதுமொழியாக்கிவிடவேண்டும் என்பது இந்தி வல்லாட்சியாளர்களுடைய குறிக்கோள். இதற்காக, ஆரிய சமாசத்தைச் சேர்ந்த சன்னியாசிகளும் இந்தி ஆதிக்க இயக்கத் தொண்டர்களும் அமிருதசரசிலிருந்து மாகாணத் தலைநகருக்கு 'யாத்திரை'யாகச் செல்லும் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

"இரண்டு வாரங்களுக்கு முன் தொடங்கப்பட்ட இவ்வியக்கம் வெவ்வேறு உருவத்திலும், தரத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சீக்கியத் தலைவர்கள் அமைச்சராகவுள்ள பஞ்சாப் மாகாண அரசாங்கம், அமைதியைக் குலைக்கும் இக்கிளர்ச்சியைச் சட்டரீதியில் தடைப்படுத்துமானால், அத்தடைக் கட்டளைகளை மீற வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதன் பின்னர், இந்தி மொழி ஆதரவாளர்களின் தலைவர்கள் உண்ணாநோன்பிருக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்கள்.

"பஞ்சாப் மாகாண மக்களின் தாய்மொழியாகிய பஞ்சாபியின் எதிர்காலத்தை மிகவும் பாதிக்கத்தக்க இக்கிளர்ச்சிக்கு எதிர்க்கிளர்ச்சியொன்று நடத்த வேண்டுமென்று சீக்கியத் தலைவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். பாடியாலாவில் சென்ற மாதம் 26-ஆம் தேதியன்று நடைபெற்ற அனைத்திந்திய பஞ்சாபி மொழியாளர்கள் மாநாட்டில், இதைக் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

"அம் மாநாட்டில் சொற்பொழிவாற்றிய பஞ்சாப் வருமான அமைச்சர் கியானி கர்தார் சிங், இந்தி ஆதிக்கத்தினருடைய நேர்மையற்ற கிளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.—'வங்காளம், சென்னை, ஆந்திரம், கேரளம் ஆகிய மாகாணங்களில் இந்தி மொழிக்கு அளிக்கப்பட்ட இடத்தைவிட மேலான ஒரு நிலையைப் பஞ்சாபில் ஏற்படுத்த நினைப்பது நேர்மையானதல்ல'- என்று அவர் கூறியிருக்கிறார். இதுமட்டுமல்லாமல், 'இந்தி மொழிக்கு இனிமேல் கொடுக்கும் ஒவ்வொரு சலுகையும் பஞ்சாபி மொழியின் வளர்ச்சியைப் பெரிதும் தடைப்படுத்தும்' என்று அவர் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

"பஞ்சாபில் இந்தி மொழியாளர்கள் தொடங்கியிருக்கும் கிளர்ச்சியினால், அம்மாகாணத்தின் அமைதி கலைக்கப்படுவதோடு, சீக்கியர்களுக்கும் — இந்துக்களுக்குமிடையேயுள்ள நல்லுறவும் பெரிதும் பாதிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

"இந்தி மொழி ஆதிக்கத்தை எதிர்த்துவந்த தமிழ் மக்கள், பஞ்சாபில் சீக்கியர்களுடைய தாய் மொழிப் பாதுகாப்பு முயற்சியை ஆழ்ந்து கவனித்து வருவார்கள்."

—இவ்வாறு, 'பஞ்சாபில் இந்திக்கு எதிர்ப்பு' என்ற தலைப்பில், 9—6—57 'தமிழ் நாடு' இதழ், தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

'தடையை மீறிக் கூட்டம்நடத்துவோம்'

புரட்சி சிங்களவர் முடிவு

கொழும்பு, ஜுன் 10—

'பெடரல் கட்சியைத் தடை செய்யவேண்டும்!' — இந்தக் கோரிக்கையுடன், தமிழ் மொழிக்கு நியாயமான மதிப்பு தர முதன் மந்திரி பண்டாரநாயகா முன்வந்துள்ளதைக் கண்டித்து, புரட்சிகர சிங்கள மொழிப் பேரவை, செவ்வாயன்று தற்போது அமுல் செய்யப்பட்டுள்ள தடையை மீறி கூட்டம் நடத்துமாம்.

கொல்வதற்குக் கூலி போதவில்லையாம்!

நூக்கிலிடும் அதிகாரிகள் விலகுகின்றனர்

அல்ஜீரியா, ஜுன் 10—

"கலகக்காரர்கள் விளைவிக்கும் தொல்லைகளைத் தாங்கி, தண்டிக்கப்பட வேண்டியவர்களைக் கொல்வதற்கு எங்களுக்குத் தரப்படும் ஊதியம் போதுமானதல்ல; இந்த வேலையிலிருந்து நாங்கள் விலகிக்கொள்ள விரும்புகிறோம்" என்று, தங்கள் பதவியைத் துறந்த அல்ஜீரிய தூக்கிலிடும் அதிகாரியும், அவரது இரு பணியாட்களும் தங்கள் விலகல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

ரூ. 65 இலட்சம் செலவில்!

ஆசியாவிலேயே மிகப் பெரிய கம்பியில்லாத் தந்தி நிலையம்

கல்கத்தாவில் நிர்மாணமாகி வருகிறதாம்!

கல்கத்தா, ஜுன் 10—

ஆசியாவிலேயே மிகப் பெரிய கம்பியில்லாத் தந்தி அனுப்பும் நிலையம் கல்கத்தாவிலிருந்து சுமார் 12 மைலுக்கு அப்பாலுள்ள டம் டம் பிரதேசத்தில் அடுத்த மாதம் வேலை செய்யத் துவங்கும்.

சுமார் ரூ. 65 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்படுகிற இந்நிலையம் சராசரி 4,000 செய்திகளை அன்றாடம் கையாளும்; இவை தவிர, வழக்கமான 'சானல்'கள் வழியாக இதர செய்திகள் அனுப்பப்படும்.

இப்புதிய நிலையம் பூர்த்தியான பின் கப்பல்களுக்கு ரேடியோ மூலம் சமிக்ஞை அறிவிக்கவும், ரேடியோ மூலம் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளவும், விமானங்களுக்கும், தரைத் தளங்களுக்குமிடையே தொடர்பு ஏற்படுத்தவும் வழிசெய்துவரும்.

60 ஏக்கரா விஸ்தீரணத்தில் பரவியுள்ள ஆண்டினா (ஏரியல்) ஏற்பாட்டில் 36 கோபுரங்கள் இருக்கும்; மிக உயர்ந்த கோபுரம் 180 அடி உயரமுள்ளது; 60 ஏரியல்கள் இருக்கும்.

இலங்கை தமிழர் அறப்போர்

முதலமைச்சர் பண்டா மீண்டும் மிரட்டுகிறார்

கொழும்பு, ஜுன் 11—

இலங்கைத் தமிழர்களின் நான்கு கோரிக்கைகளை ஏற்க மறுத்து இலங்கையின் அமைதிக்கு ஆபத்தைக் கொண்டுவரும் பிரதமர் பண்டாரநாயகா, ஆகஸ்டு அறப்போர் இயக்கத்திற்கு மீண்டுமோர் 'அபாய அறிவிப்பு' தந்துள்ளார்.

அறப்போர் அமைதிக்குப் பாதகமில்லாத வகையில் அஹிம்சை—கண்ணியம்—கட்டுப்பாடுடன் நடத்தப்படும் என்று பெடரல் கட்சித் தலைவர்கள் அறிவித்திருந்தும்கூட, 'அறப்போர் இரத்தக் களறியில் இலங்கையைத் திணிக்கும்' என்று பண்டாரநாயகா வர்ணித்துள்ளார்.

'பெடரல் கட்சித் தலைவர்கள் இதுவரை பேசியுள்ளவையே தேசத் துரோகத்திற்குப் போதுமான குற்றமாகும்' என்று அவர் கருதுகிறாராம்!

'தொடர்ந்து இதே போக்கைக் கடைபிடிக்காமல் அறப்போரைக் கைவிட வேண்டும்' என்று பெடரல் கட்சியினரை எச்சரித்துள்ளார் பண்டா!

பெடரல் கட்சியினர் வலியுறுத்திவரும் நான்கு கோரிக்கைகளை, இலங்கைத் தமிழர் உள்பட எல்லோரும் ஏற்றுக்கொள்ள இயலாதவையாம்!

'அறப்போர், இலங்கையின் அமைதியைக் கெடுத்து குழப்பத்தை உண்டாக்கும்' என்று எல்லா இலங்கை தினசரிகளும் வர்ணித்து அறப்போரை எதிர்த்துள்ளதைக் கண்டு பண்டா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

அந்நிய செலாவணியைக் கட்டுப்படுத்தி பாதுகாக்கவே, இலங்கையை விட்டு வெளியே செல்வதற்கு 'விசா' (அனுமதி) மறுக்கப்படுகிறது என்றும் விசித்திர விளக்கம் தந்துள்ளார்.

இது, நெடுநாளைய திட்டமாம்! அறப்போருக்கும் இந்த திடீர் நடவடிக்கைக்கும் சம்பந்தமில்லையாம்!

தன்னுடைய கட்சி திரட்டிவரும் 'தொண்டர் படை'யை தமிழர்கள் தவறுதலாகப் புரிந்துகொண்டனராம்!

மக்களுக்குத் தொண்டாற்றும் 'தொண்டர் படை' அமைத்தலே தன்னுடைய கட்சியின் இலட்சியமாம்!

தனிப்பட்ட இராணுவத்தை நிறுவும் நோக்கம் எதும் அவருக்கு இல்லையாம்!

பத்திரிகை நிருபர்களிடம் இலங்கைப் பிரதமர் வெளியிட்டுள்ள முக்கிய கருத்துக்கள் மேலே தரப்பட்டுள்ளன.

வட்டமேசை மாநாடு கூட்ட வேண்டுமாம்!

முன்னர் இலங்கை பிரதமராகயிருந்த சேனநாயகா பத்திரிகை நிருபர்களிடம் இலங்கைத் தமிழர் அறப்போர் பற்றி கருத்து தெரிவித்துள்ளார்.

மொழிப் பிரச்சினையை தேசீயக் கண்கொண்டு ஆராய வேண்டும் என்றும், நான்கு கோரிக்கைகளைப் பற்றி ஆராய வட்டமேசை மாநாடு கூட்டவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாயூரம்தொகுதி தேர்தல் வழக்கு

குடவாசல், ஜுன் 10—

மாயூரம் தொகுதி தேர்தல் வழக்கை விசாரணைசெய்ய நாகப்பட்டினம் மாவட்ட நீதிபதி ஹாஜி பி. குன்ஹாமத் குட்டி அவர்கள் தேர்தல் கமிஷனால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

குடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி அவர்களை, ஜுன் 21-ந் தேதிக்குள் தனக்குள்ள வழக்கை எடுத்துரைக்கும்படி, 7-ந் தேதியன்று தேர்தல்கமிஷனிடமிருந்து அவருக்குத் தாக்கீது வந்துள்ளது. (ந. நி.)

தி. மு. கழக சமுதாயக் குறிக்கோள்

திருவள்ளுவர் கண்ட 'இலட்சிய நெறி'யுடன் ஒன்றுபட்டதாகும்

வள்ளுவர் கல்விக் கழக ஆண்டு விழாவில் அண்ணா, கழகத் தோழர்கள் விளக்கம்

சென்னை, ஜுன் 9—

சென்னை 46-வது வட்டம் பீமண்ணன்பேட்டை வள்ளுவர் கல்விக் கழகத்தின் இரண்டாம் ஆண்டு விழாவும், வள்ளுவர் படிப்பகத் திறப்பு விழாவும் தோழர் பொன். கு. கோதண்டபாணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

கூட்டம் துவங்குவதற்கு முன், தோழர் கிருட்டிணமூர்த்தியின் இன எழுச்சிப் பாடலுடன், வள்ளுவர் கல்விக் கழகச் செயலாளர் தோழர் துரைசாமி அவர்கள் குழுவினரின் சிலம்ப விளையாட்டு நடைபெற்றது.

தலைவர் தனது முன்னுரையில், தமிழக மக்களிடம் வள்ளுவரின் பெருமைகளையும், அவரது அறநெறியையும் தெளிவாக்கிய பெருமை, சுயமரியாதை இயக்க காலத்திலிருந்து இன்றுவரை இடைவிடாது பிரச்சாரம் செய்த நம்மைச் சார்ந்ததே என்றும், வள்ளுவர் நெறி மக்களுக்கு உணர்த்தும் நல்லறிவை, திராவிட முன்னேற்றக் கழகம் கொள்கை உருவிலே நாட்டு மக்களிடையே சொல்லி வருகிறதென்றும், அதற்கு உறுதுணையாக பணியாற்றும் மன்றங்கள்—படிப்பகங்கள்—கழகங்களில் ஒன்றுதான் இந்த வள்ளுவர் கல்விக் கழகமும்—வள்ளுவர் படிப்பகமும் என்று கூறினர்.

அடுத்து குடந்தை கே. கே. நீலமேகம் அவர்கள் விழாவில் கலந்துகொண்டதற்கு மகிழ்ச்சி தெரிவித்து இரண்டொரு நிமிடம் பேசினர்.

பின் தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் அவர்கள், தி. மு. கழகத்தின் அடிப்படை சமுதாய இலட்சியம் திருவள்ளுவரின் சமுதாய இலட்சியத்தோடு ஒன்றுபட்டது என்றும், அந்த இலட்சியத்தைக் கொண்ட தி. மு. கழகம் தமிழக மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையும்—விடுதலை வேட்கையையும் அரசியல் நெறியாகக் கொண்டு இயங்கி வந்திருக்கிறதென்றும், டெல்லி சர்க்கார் போட்டிருக்கும் பெரிய பெரிய வரிகளுக்குக் கூறும் காரணம் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டமென்றும், ஆனால் அத்திட்டத்தில் நமது நாட்டிற்கு நியாயமான—உரிமையான பங்கு டில்லி ஆதிக்கவாதிகளால் கொடுக்கப்படவில்லையென்றும், இச்செய்கை நமக்குத் தொடர்பற்ற ஓர் ஆட்சி இங்கு நடைபெறுகின்றதென்ற உண்மையைத் தெளிவுபடுத்துவதாகவும், புதிய வரிகளைக் கண்டிக்கும் மாற்றுக் கட்சியினர் தென்னாட்டுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை மறைத்தே பேசுகிறார்கள் என்றும், ஆனால் அந்தப் பேருண்மை மக்களிடம் தெளிவாக்கப்பட்டு வருகிறதென்றும், புதிய வரிகளைக் கண்டித்து ஆச்சாரியார் விடுத்திருக்கும் எச்சரிக்கையை ஆட்சியாளருக்கு நினைவூட்டியும், திராவிடம் பிரிய வேண்டியதன் அவசியத்தையும் தெளிவாக்கினர்.

அடுத்து மாணவி எஸ். பி. சற்குணம் பேசுகையில், ஆட்சியாளர்கள் குறள்நெறியை சிந்தித்துப் பார்க்க வேண்டியதின் அவசியத்தை குறட்பாக்களாலேயே விளக்கியும், சென்னை ஆட்சி மன்றம் தூங்கும் மடமாகவும்—ஆட்சியாளர் வடநாட்டுக்குக் காவடி தூக்குவோராகவும் இருந்ததால்தான் ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாட்டுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறதென்றும், தமிழ் நாட்டிற்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்கக்கூட இணங்காத—தமிழ்ப் பற்று இல்லாதவர்கள் சட்ட மன்றத்தில் இருக்கிற விசித்திரத்தையும், வள்ளுவர் கூறிய 'இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்' என்ற குறளின் கருத்துப்படி ஆட்சியாளர் எதிர்க்கட்சியினரை மதித்து நடக்க வேண்டும் என்றும், அவ்வாறு மதிக்காவிட்டால், ஆட்சியாளரை மக்கள் மதிக்க மாட்டார்கள் என்பதையும் தெளிவாக்கினர்.

அடுத்து தோழர் கண்ணதாசன் அவர்கள், இன்றைய ஆட்சியாளர்—வள்ளுவர் கூறிய 'குடிதழீஇ கோலோச்சு மாநிலமன்னன்' அல்லவென்றும், இவர்கள் 'மக்களின் தலை தடவி வாழும் ஆட்சி'யென்றும், இந்த ஆட்சியாளர்களால் தான், நாட்டில் 'உறுபசியும் - ஓவாப்பிணியும் - செறுபகையும்' நாட்டில் நிலவுகிறதென்ற உண்மையையும் தெள்ளிய முறையில் விளக்கி சிறிது நேரம் பேசினர்.

இறுதியாக அண்ணா அவர்கள், இந்த நாடு தாழ்நிலைக்குச் சென்றதன் காரணம் வள்ளுவரையும்—அவரது நெறியையும் மறந்ததால் தான் என்றும், எந்த நாட்டிற்கும் இல்லா சிறப்பு திருக்குறளைப் பெற்றிருக்கும் தமிழகத்திற்கு உண்டு என்றும், மற்றைய நாடுகளில் சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாடில் போன்ற மூதறிஞர்கள் கொடுத்த கருத்துக்களை, வள்ளுவர் ஒருவரே இரண்டிரண்டு அடிகளில் தொகுத்திருக்கிறார் என்றும், மக்கள் அவர் நெறியைப் பின்பற்ற வேண்டியிருப்பதையும், புதிய வரிகளைப் பற்றியும், சோஷலிஸ்டுக் கட்சியினர் நடாத்தவிருக்கும் போராட்டத்தைப் பற்றிய கருத்தையும் விளக்கி ஓர் அரிய சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

அண்ணா அவர்களுக்கும் மற்ற தோழர்களுக்கும் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

இறுதியில், அண்ணா அவர்களால், அவ்வட்டத் தோழர் தாமோதரன்—தோழியர் இலட்சுமி வாழ்க்கை ஒப்பந்த விழா சிறப்புடன்—சிக்கனமாக நடைபெற்றது பாராட்டத்தகுந்தது. மணமக்கள் மாலை மாற்றிக்கொண்டு தங்களது மண வினையை முடித்துக் கொண்டனர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2. அன்பளிப்பாகத் தரப்பட்டது. (ந. நி.)

'அந்நிய உதவி அவசியமில்லை'

அஸ்வான் அணைத் திட்டம் மீண்டும் ஆராயப்பட்டது

எகிப்து, ஜுன் 11—

சுமார் 25 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கவும், 20,00,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கும் உருவாக்கப்பட்டுள்ள அஸ்வான் திட்டத்திற்கு மொத்தம் ரூ. 45 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்திற்கு ஆரம்பத்தில் பிரிட்டனும், அமெரிக்காவும் நிதி உதவியளிப்பதாக வாக்குறுதி தந்திருந்தன; ஆனால், நிதி உதவியளிக்க இரண்டு நாடுகளும் பின்பு மறுத்துவிட்டன.

எகிப்து அரசாங்கம் திட்டத்தை மீண்டும் ஆராய்ந்து 10 கோடி ஸ்டர்லிங் செலவில் புதிய திட்டத்தைத் தயாரித்துள்ளது.

இப்போதைய திட்டத்திற்கு அந்நிய நாடுகளின் உதவியை எகிப்து எதிர்பார்க்கவில்லை என்று அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கேரளத்தில் வேலையில்லாத் திண்டாட்டம்

நிதி மந்திரியின் மதிப்பீடு

திருவனந்தபுரம், ஜுன் 9—

கேரள மாநிலத்தில் இப்போது 4,20,000 பேர் வேலையற்றிருப்பதாகவும், இவர்களுக்கு வேலை தேட வேண்டியிருப்பதுடன் ஆண்டுதோறும் 1,10,000 பேருக்கு வேலை தேடித்தர வேண்டியிருக்கும் என்றும் ஒரு மதிப்பீடு வெளியிடப்பட்டிருக்கிறது.

"மக்கள் தொகைச் செறிவு, விவசாயத்திற்கு இலாயக்கான நில அருமை, தொழில் இன்மை ஆகியவை, கேரள மாநிலத்தின் பிரதான பிரச்சினையாக வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்கியிருக்கின்றன," என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

இந்தத் தகவல்களை அளித்த நிதி மந்திரி அச்சுதமேனன், கேரளத்தில், ஆண்டுதோறும் மக்கள் தொகை 3 இலட்சம் பேர்வரை அதிகரித்துவருவதாகவும், இதுவும் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பிரச்சினையின் கடுமையை அதிகரிப்பதாகவும் கூறியிருக்கிறார்.

சென்னையில் சிறப்புக் கூட்டம்

கழகத் தோழர்களின் இலட்சிய விளக்கம்

சென்னை, ஜுன் 10—

சென்னை சிந்தனையாளர் கழகச் சார்பில், நேற்று காலை சென்னை கோகலே மண்டபத்தில் ஓர் சிறப்புக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏராளமான கழகத் தோழர்கள் வந்திருந்தனர்.

தோழர் கண்ணதாசன் 'உலகம் இவ்வளவுதான்' என்ற தலைப்பிலும், தோழர் டி. கே. சீனிவாசன் 'தத்துவ வரலாறு' என்ற தலைப்பிலும், தோழர் கி. மனோகரன் 'அபாய அறிவிப்பு' எனும் தலைப்பிலும் முறையே கருத்துக்கள் நிறைந்த சொற்பொழிவுகளை நிகழ்த்தி, கூடியிருந்த மக்களுக்கு இலட்சிய விளக்கம் தந்தனர்.

தோழர் புகழேந்தி முன்மொழிய, தோழர் அர்ச்சுனன் வழிமொழிய, தோழர் க. அறிவழகன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, தற்கால அரசியல் நிலையைச் சுட்டிக்காட்டி, பண்டைய வரலாற்று ஏடுகளில் காணப்படும் பேருண்மைகளை அவற்றிற்கு ஆதாரமாக எடுத்துரைத்து, இன்றைய சமுதாயத்தின் ஆக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் பயன்படத்தக்கமுறையில் சொற்பொழிவாற்றினர்.

முதலில் தோழர் கண்ணதாசன் அவர்கள், இலக்கியச் சான்றுகளை அழகுற எடுத்துரைத்து, பண்டையத் தமிழரின் பெருமைக் களஞ்சியமாக விளங்கும் திருக்குறளிலிருந்து மேற்கோள்களைக்காட்டி, 'உலகம் இவ்வளவு தான்' என்ற பொருளைப்பற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

அடுத்து தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், எளிய நடையில், பற்பல ஏடுகளிலிருந்தும், வரலாற்றுச் சுவடிகளிலிருந்தும், உலகத்தின் கடந்த கால நிகழ்ச்சிகளிலிருந்தும் தத்துவம் வளர்ந்து வந்த வரலாற்றினை எடுத்துரைத்து, கூடியிருந்தோர் மனதில் பதியவைத்தார்.

இறுதியில் தோழர் கி. மனோகரன் அவர்கள், உலகத்திற்கு வல்லரசுகளால் உள்ள அபாயத்தையும், டில்லியில் பண்டித நேருவின் ஆட்சியால் உருவாகி வரும் அபாயத்தையும், தமிழகத்தில் காமராசர் ஆட்சியால் ஏற்பட்டுள்ள 'சனநாயக அபாய'த்தையும் விளக்கி, 'அபாய அறிவிப்பு' என்ற தலைப்பின்கீழ் உரையாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் நன்றி நவில கூட்டம் முடிவுபெற்றது.

டெல்லியின் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்பும்!

நாகர்கள் கிளர்ச்சி ஓயவில்லையாம்!

சட்டசபையில் அசாம் கவர்னர் ஒப்புதல்

ஷில்லாங், ஜுன் 10—

டெல்லிப் பேரரசின் பிரமாதமான இராணுவ நடவடிக்கைகளுக்குப் பிறகும் நாகர்களின் விடுதலைக் கிளர்ச்சியும், அதை ஒட்டிய அவர்களது நடவடிக்கைகளும் அடங்கிவிடவில்லை என்பதை, அசாம் கவர்னர் சட்டசபையில் பேசும்போது ஒப்பியிருக்கிறார் என்று தெரிய வருகிறது.

"ஏராளமான தொண்டர்கள், ஆயுதங்கள், வெடிகுண்டுகள் இவற்றுடன் இன்னும் நாகர் கிளர்ச்சித் தலைமை நீடிக்கிறது"

என்று கவர்னரான பாசல் அலி சட்டசபையில் குறிப்பிட்டாராம்.

"இவர்கள் அனைவரும் கொன்று குவிக்கப்படும் வரை, அல்லது இவர்கள் எல்லோரும் சரணடையும் வரை இராணுவ நடவடிக்கைகளை நீடிக்க வேண்டியுள்ளது"

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தீவிர நாகர்களின் தாக்குதல்கள் பற்றி வர்ணித்த அவர், கிளர்ச்சிக்காரர்கள் இராணுவத்தையும் கூட ஏமாற்றிவிடக் கூடிய தந்திரசாலிகளாக இருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

இராணுவத்தினர், சர்க்காரிடம் விசுவாசமாயுள்ள நாகர்களுக்குப் பாதுகாப்புதரும் வேலையில் ஈடுபட்டால், எதிர்தாக்குதல்களில் ஈடுபட முடியாது போய்விடுகிறது என்றும், எனவே டெல்லி சர்க்காரிடம், வேறு பல மாநிலங்களிலிருந்து இந்தப் பாதுகாப்பு வேலையைச் செய்வதற்கான போலீஸ் படையைத் தருவித்துத் தருமாறு கேட்டிருப்பதாகவும் கவர்னர் கூறியிருக்கிறாராம்.

காங்கிரசார் கட்டிய பாலம்!

மக்களிடம் வரி வசூலிக்கும் கொடுமை

பெருமை வேறு கேடா?

பாலம் கட்டினோம் என்று பெருமை பேசுகிறார்கள் அல்லவா காங்கிரசார்?

அவர்கள் பாலம் கட்டிய பிறகு, கட்டிய பாலத்தின் வழியாகச் செல்லும் வண்டிகளுக்கு வரி விதிக்கிறார்கள் பாலம் கட்டிய செலவைச் சரிக்கட்டுவதற்காக என்ற செய்தி, அவர்கள் பெருமை கொண்டாட உதவக் கூடியதா?

தாமிரபாணி நதிமீது மூக்காணியில் ஒரு பாலம் கட்டினார்கள். அதனை, முதல்வர் காமராசர் கடந்த 7-ந் தேதிதான் திறந்து வைத்தார்.

'அன்று முதல் அந்தப் பாலத்தின் வழியாகச் செல்லும் எல்லா வாகனங்களுக்கும் வரி வசூலிக்கப்படும்' என்று மாவட்ட அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

லாரி ஒன்றுக்கு ஒரு நாளைக்கு ரூ. 3; பஸ் ஒன்றுக்கு ரூ. 2; கார், வாடகைக் கார் ஒன்றுக்கு ரூ. 1; கட்டை வண்டி ஒன்றுக்கு அணா 4; சைகிள் ஒன்றுக்கு ஓரணா - என்ற விகிதத்தில் இந்த வரி விதிக்கபபடுமாம்.

ஈடேருத எண்ணம்!

பள்ளிகளில் 30,000 பேர்களுக்கு இடமில்லையாம்!

புதுடில்லி, ஜுன் 10—

கல்வித் துறையில் மேற்கொள்ள வேண்டும் என்று திட்டமிடப்பட்ட பல திட்டங்கள் போதிய பண வசதியின்மையால் கைவிடப்பட்டன என்று மாநில கல்வி அமைச்சர் டாக்டர் ஸ்ரீமாலி, அரசாங்கத்தின் கல்வி சீர்திருத்தத்தின் தோல்விக்குக் காரணம் கற்பித்துள்ளார்.

ஆதாரக் கல்வியை மாநிலங்களே பொறுப்பேற்று நடத்த முன்வரவேண்டுமாம்.

'ஆசிரியர்களின் ஊதியத்தை நல்லபடி மாற்றியமைக்க வேண்டும்' என்று கூறுவதோடு பிரச்சினையை அவர் முடித்துக் கொண்டார்.

டில்லியில் மட்டும் 30,000 மாணவர்களுக்கு பள்ளிகளில் இடமில்லை என்ற நிலையை வருத்தத்துடன் தெரிவித்துள்ளார்.

'பொதுவாகக் கல்வித்துறை மோசமடைந்துவிட்டது' என்பதை அமைச்சரே ஒப்புக்கொண்டு, 'அதற்குக் காரணம் பள்ளிகளில் அதிகப்படியான மாணவர்களை சேர்த்துக்கொண்டு ஆசிரியர்களைத் திண்டாடச் செய்ததே' என்று தெரிவித்துள்ளார்.

தெ. ஆ. சர்க்கார் இனவெறி!

பல்கலைக் கழக வேந்தர் தலைமையில் பேராசிரியர், மாணவர் கண்டன ஊர்வலம்

கேப்டவுன், ஜுன் 10—

தென்னுப்பிரிக்க சர்க்காரின் 'பல்கலைக் கழகங்களிலும் இன ஒதுக்கல் அமுலாக வேண்டும்' என்ற மசோதாவிற்கு எதிராகக் கேப்டவுன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சுமார் 2,500 பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பட்டதாரிகள், மாணவர்கள் எல்லாம் சேர்ந்து நகரின் முக்கிய வீதிகள் வழியாக மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தியிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

தென்னுப்பிரிக்காவின் முன்னாள் பிரதம நீதிபதியும், பல்கலைக் கழகத்தின் வேந்தருமான ஆல்பர்ட்வான் தெர்சாந்த் சென்வ்விவர்ஸ் என்பார், ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கி நடத்தியிருக்கிறார்.

இப்போது தென்னுப்பிரிக்க பாராளு மன்றத்தின் முன்னுள்ள அந்த மசோதா, வெள்ளையரல்லாதாருக்கு என நான்கு பல்கலைக் கழகங்கள் தனியாக ஏற்படுத்தப்படும் என்றும், இப்போதுள்ள பல்கலைக் கழகங்களில் வெள்ளையரல்லாதார் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் கூறுகிறது.

ஊர்வலம் வந்தபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் வழி நெடுகக் கூடி நின்று ஆரவாரம் செய்திருக்கின்றனர்.

இந்திக்கு ஆதிக்கம்கோரி ஆரிய சமாஜத்தினர் வல்லடி வழக்கு

பஞ்சாப் சர்க்கார் அலுவலகத்தின் முன் ஆர்ப்பாட்டம்

சந்திகார், ஜூன் 10—

ஆரிய சமாஜத்தினரின் 'இந்தி ரட்ச சமிதி'யினர் இன்று இந்திக்கு பஞ்சாப் மாநிலத்தில் உரிய இடத்தைப் பெற்றுத் தருவது என்ற பெயரில் மாநில சர்க்கார் அலுவலகத்தின்முன் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தினராம்!

ஏற்கனவே அவர்கள் அறிவித்திருந்தபடி சுமார் 14 தொண்டர்கள் அலுவலகத்தின்முன் கூடி கோஷங்கள் எழுப்பி ஆரவாரித்தனராம்!

கட்டுப்பாடுகள் தளருகின்றன

கோவாவிற்குச் செல்ல தாராள அனுமதி

புதுடில்லி, ஜூன் 10—

இந்தியப் பகுதியான கோவா போர்ச்சுகீசியர் ஆதிக்கத்தில் இருந்து விடுபட கோவா மக்கள் போராட்டம் நடத்திவருகின்றனர். இந்தப் போராட்டத்தின் பல்வேறு அம்சங்களைப் பற்றி 11 கோவானியத் தலைவர்கள் பண்டித நேருவுடன் கலந்தாலோசித்துள்ளனர்.

இந்த ஆலோசனையின் பலனுக கோவானியர்கள் கோவாவுக்கு செல்லத் தாராள அனுமதி வழங்கவும், ரூ. 100 மதிப்புள்ள இந்திய நாணயங்கள் எடுத்துச்செல்லவும், அஞ்சல் மூலம் பணம் அனுப்புவதற்கும் அமுலிலுள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என்றும், ஆனல் கோவாவுடன் வர்த்தகம் நடத்துவது சம்பந்தமாக உள்ள கட்டுப்பாடுகள் வாபஸ் பெறப்படும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை என்றும் பண்டித நேரு அறிவித்துள்ளார்.

கோவா போராட்டத்தை சமாதான முறையில் நடத்தவே இந்தியா உறுதி கொண்டுள்ளதாம். கோவா போராட்டத்தில் தண்டனை பெற்று சிறையில் உள்ள கைதிகள் சம்பந்தமாக பண்டிதர் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

தற்போது சிறையில் 370 கோவானியர் தண்டனை அனுபவித்து வருகின்றனராம். 3,000 பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளனராம். 10 கோவானிய கைதிகளில் 8 பேர் ஆப்பிரிக்காவிலும், 2 பேர் லிஸ்பனிலும் சிறைவைக்கப்பட்டுள்ளனராம்.

உ. பி. கவர்னராக வி. வி. கிரி பதவி ஏற்பு

இலட்சுமணபுரி, ஜூன் 10—

உத்திரப் பிரதேச மாநில கவர்னராக திரு. வி. வி. கிரி அவர்கள் இன்று பதவி ஏற்றுக்கொண்டார்.

அலகாபாத் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அவருக்குப் பதவி பிரமாணம் செய்வித்திருக்கிறார்.

திரு. கிரி கவர்னர் பதவி ஏற்ற வைபவத்தை, அவரது 83 வயதான தாயாரும் பார்த்து மகிழ்ந்திருக்கிறார்.

தசரா - இனி ஒரு தேசீய விழாவாம்!

பெங்களூர், ஜூன் 10—

மைசூர் ஒரு சமஸ்தானமாக இருந்தபோது, அங்கு தசரா, ஒரு ஆடம்பர விழாவாக ஆண்டு தோறும் நடத்தப்பட்டதல்லவா?

புதிய மைசூர் மாநிலம் பிறந்த பின்னர் தசரா பற்றி முடிவு செய்ய குழு ஒன்று நியமிக்கப்பட்டது; அக்குழு, தசராவை மைசூர் மாநிலம் முழுவதும் ஒரு தேசிய திருவிழாவாகக் கொண்டாட வேண்டும் என்று முடிவு செய்துள்ளதாம்.

வழக்கம்போல, யானை சவாரி, தீவட்டி ஊர்வலம் உள்பட எல்லா நிகழ்ச்சிகளும் உண்டாம்!

மந்திரிகள் அலுவலகத்திலிருந்து வெளியே வந்தபோது, ராமேஷ்வர் ஆனந்த் என்ற சாமியார் தலைமையில் கூடியிருந்த தொண்டர்கள் கார்முன்னல் படுத்துகொண்டு மந்திரிகளின் கார்களைத் தடுத்தனராம்! போலீசார் தலையிடவில்லை என்று கூறப்படுகிறது.

சில மந்திரிகள் காரைவிட்டு இறங்கிவந்து, சமிதியின் கோரிக்கைகள் சர்க்காரின் பரிசீலனையில் இருக்கின்றன என்று தெரிவித்துச் சென்றுள்ளனராம்.

அத்துடன் இதுபோல போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்ய வேண்டாம் என்றும், சர்க்கார் அலுவலகம் வேலை செய்வதற்கு இடையூருக இருக்க வேண்டாம் எனவும், மந்திரிகள் தொண்டர்களைக் கேட்டுக்கொண்டனராம்.

ஆனல் அந்த ஆர்ப்பாட்டக்காரர்களின் தலைவரான ராமேஷ்வர் ஆனந்த் என்பவரோ, நாளை முதல், மந்திரிகளும் சர்க்கார் ஊழியர்களும் அலுவலகத்திற்குள் செல்லாதவாறு தாங்கள் தடுக்கப்போவதாகத் தெரிவித்தாராம்!

மதமாற்றத்தின் எதிரொலியா?

சாதி இந்துக்கள்—பௌத்தர்கள் இடையே கைகலப்பு

400 பேர் கைதாகியுள்ளனர்

நாகபுரி, ஜூன் 10—

மத்திய பிரதேசம், மற்றும் சில மாநிலங்களில் இந்து மதத்தில் மலிந்துள்ள கொடுமைகளைத் தாங்கமுடியாது ஏராளமானவர் புத்தமதத்தில் சேர்ந்துகொண்டு வருவது அறிந்த ஒன்றுரும்.

இதன் எதிரொலியாக அமராவதிக்கு அருகில் சாதி இந்துக்களுக்கும், மதமாற்றம் செய்துகொண்ட புத்தர்களுக்குமிடையே மோதுதல் ஏற்பட்டதாம். ஒரு காங்கிரஸ் எம்.எல்.ஏ. வீட்டிற்கும், 'பாரதமாதா மந்திர்' ஒன்றுக்கும் தீ வைக்கப்பட்டதாம்.

போலீசார் தலையிட்டு 400 பேர்களைக் கைது செய்துள்ளனராம்.

இந்தச் சண்டையில் ஒருவர் மரணமடைந்தார் என்றும், 24 பேர் காயமடைந்தனர் என்றும், தற்போது இங்கு அமைதி நிலவுகிறது என்றும் தெரியவருகிறது.

பிரான்சுக்குப் புதிய பிரதமர்!

பாரிஸ், ஜூன் 10—

புதிய வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதின் விளைவாக ஆட்சிபீடத்தில் இருந்த பிரதமர் மாலெட் தனது அமைச்சரவையின் இராஜினமாவை தந்து வெளியேறிவிட்டாரல்லவா?

நாளை முதல் தீவிரக் கட்சித் தலைவர் மாரீஸ் போர்ஜஸ் மானுரி இன்று முதலமைச்சராக நியமனம் பெற்றுள்ளார் என்று மக்கள் தலைவர் ரினிகோடி அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

கழகக் கூட்டங்கள்

★

புலிவலம்:

(திருச்சி மாவட்டம்)

பசனை மடம் திடலில்

13—6—57 இரவு 7 மணிக்கு

தலைவர்:

ஆ. இராமானுசம்

பேசுவோர்:

டி. கே. சீனிவாசன்

சி. இராசவேல்

சி. பசவலிங்கம்

அ. கலியபெருமாள்

ம. சோமசுந்தரம்

தி. கிருட்டிணசாமி

★

மேலூர் வட்ட— வெள்ளலூர்:

அழகிரி மைதானத்தில்

13—6—57 மாலை 5 மணிக்கு

தலைவர்: ஏ. வேலுச்சாமி

கொடியேற்றுபவர்:

எஸ். எஸ். இராசா

பேசுவோர்:

எஸ். முத்து

கே. எஸ். சந்தானம்

இசை: டி. வி. பச்சையப்பன்

சென்னை-நுங்கம்பாக்கம் இளைஞர் மறுமலர்ச்சி மன்ற செயற்குழு உறுப்பினர்கட்கு:

13-6-57 இரவு 8-30 மணிக்கு மன்றப் பணிமனையில் செயற்குழுக் கூட்டம் தோழர் கி. சு. கள்ளிவளவன் தலைமையில் நடைபெறும்; அதுபோது பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

வடசென்னை சலவையாளர் சங்கத் திறப்பு விழா

12-6-57 மாலை 6-மணிக்கு மேற்படி சங்கத் திறப்பு விழா எண் 27-எல், நாராயணப்பன் தெரு காம்பவுண்டில் மேற்படி சங்கத் தலைவர் தோழர் எம். ஆறுமுகம் தலைமையில் நடைபெறும்; சென்னை நகர மன்றத் தலைவர் கே. என். சீனிவாசன் அவர்களும் மற்றும் பலரும் கலந்துகொள்வர்.

ஆண்டு விழா—அன்பளிப்பு

சென்னை மூர்மார்க்கெட் ஆக்கர்ஸ், வெண்டர்ஸ் அசோசியேஷன் 6-வது ஆண்டுவிழாவும், தோழர் க. ஆரியசங்காரனுக்கு கைக்கடிகார அன்பளிப்பும் 12-6-57 மாலை 5-மணிக்கு சென்னை மூர்மார்க்கெட் கோல்ட் ஸ்டோரேஜ் அருகிலுள்ள திறந்தவெளியில் சென்னை நகரமன்ற ஆணையாளர் திரு. டி. பாலசுந்தரம் அவர்கள் முன்னிலையில் ஆரம்பமாகும். திருவாளர்கள் கே. இராமதாஸ், அ. பொ. அரசு, க. மாணிக்கவாசகம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

எட்டு சிறைக் கைதிகள் எட்டாம் வகுப்புப் பரீட்சையில் தேர்வு

வேலூர், ஜூன் 10—

வேலூர் மத்திய சிறையில் உள்ள கைதிகளில் ஒன்பது பேர் ஈ. எஸ். எல். சி. பரீட்சை எழுதினர் என்றும், இவர்களில் 8 பேர் பரீட்சையில் தேறிவிட்டனர் என்றும், தேறியவர்கள் அத்தனை பேரும் எல்லாப் பாடங்களிலும் 50 சத விகிதத்திற்கும் அதிக மான மார்க்குகள் வாங்கியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த மார்ச் திங்களில் எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுத இந்தக் கைதிகளை அனுமதிக்க வேண்டும் என்று சர்க்காரை, சிறை அதிகாரி கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தியாவுக்கு பிரிட்டிஷ் விமானங்கள்!

சென்ற ஏப்ரல் மாதத்தில் 7,01,728 பவுன் பெறுமான முள்ள விமானங்களையும், விமானச் சாதனங்களையும், பிரிட்டனிடமிருந்து இந்தியா கொள்முதல் செய்ததாம்!

இலங்கை அமைச்சர் செயலாளருக்கு கருப்புக் கொடி வரவேற்பு

தமிழர்மீது போலீசார் தடியடிப் பிரயோகம்

கொழும்பு, ஜூன் 10—

யாழ்ப்பாணம் கூட்டம் ஒன்றில் பேசுவதற்கு வந்த இலங்கை தொழில் மந்திரியின் பாராளு மன்றச் செயலாளருக்குத் தமிழ் மக்கள் கருப்புக்கொடி வரவேற்பு அளித்திருக்கின்றனர்.

அத்துடன், டிசோயஜா என்ற அந்தச் செயலாளர், உத்தேசக் கூட்டத்தில் பேசுவதற்கு அனுமதிக்கப்படக் கூடாதெனவும் கோஷம் எழுப்பியிருக்கின்றனர்.

இதன் விளைவாகப் போலீசார், தமிழ் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்து சுமார் 10 பேர்களைப் படுகாயப்படுத்தினர் என்று செய்திகள் கூறுகின்றன.

'இந்தச் செயலாளரும், அவர் சார்ந்துள்ள சர்க்காரும்தான் தமிழர் தம் உரிமைகளைப் பறித்தவர்கள்; என்று கூறி 'அப்படிப்பட்டவர்கள் 'தமிழர் பகுதியில் பேசத் தேவை இல்லை; என்று தமிழர்கள் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

பள்ளிகள், கல்லூரிகள் திறப்பு மேலும் ஒத்திவைப்பு?

சென்னை, ஜூன் 11—

சென்னை நகரில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள் 17-ம் தேதிக்குப் பிறகுதான் திறக்கப்பட வேண்டும் என்று முன்னமேயே அரசாங்கம் உத்திரவு பிறப்பித்திருந்தது.

கனிக்காய்ச்சலின் தற்போதைய நிலைமை காரணமாக மீண்டும் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் திறப்பதை அத்தேதிக்குப் பிறகும் ஒத்திவைக்கலாமா என்பது பற்றி சர்க்கார் இப்போது பரிசீலனை செய்கின்றனராம்.

இதுபற்றி இன்னும் இரண்டொரு நாட்களில் முடிவு அறிவிக்கப்படும்.

திருப்தியளிக்காத தீர்ப்பு வெளிவரும்?

சென்னை—ஆந்திர எல்லைத் தகராறில் புதிய திருப்பம்?

பம்பாய், ஜூன் 11—

சென்னை—ஆந்திர எல்லைத் தகராறு சம்பந்தமாக ஆந்திர அரசாங்கத்துடன் கலந்தாலோசித்தபின் படாஸ்கர் பம்பாய் திரும்பிவிட்டார்.

இப்பிரச்சினையில் தனது தீர்ப்பு இரு தரப்பாருக்கும் திருப்தி அளிக்காதென்றும், ஒரு வாரத்தில் தனது தீர்ப்பு வெளியாகுமென்றும் அவர் கூறியதாக செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

கோவில்களுக்கு சர்க்கார் உதவி

ரூ. 4 இலட்சம் வழங்கப்பட்டதாம்

குடந்தை, ஜூன் 9—

மாநிலத்தில் உள்ள சுமார் 62 கோவில்களுக்கு சர்க்கார் ரூ. 4 இலட்சம் வரையில் உதவித் தொகையாகத் தந்திருக்கின்றனர் என்று மடாலய இலாகா அதிகாரி ஏ. உத்தண்டராமன் அவர்கள் கூறியிருக்கிறார்.

திருவைக்காவர் சிவன் கோவிலில், சைவத் திருமுறையினர் ஓதியபாக்கள் பொறித்த சலவைக் கற்களைத் திறந்து வைக்கும் போதுதான் அந்த அதிகாரி மேற்கண்ட தகவலைத் தந்திருக்கிறார்.

இனி பண உதவி கிடைக்காதாம்!

சேரிகள் ஒழிப்புத் திட்டத்தின் கதி என்னவாகும்?

திருவாரூர், ஜூன் 11—

சேரிகள் ஒழிப்புத் திட்டங்கள் சம்பந்தமாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசாங்கத்திடமிருந்து எந்தவித பண உதவியும் கிடைக்காது என்று நகரசபை நிர்வாகிகளுக்கு அரசாங்கம் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளதாம்.

புதிய நீதிமன்றங்கள் நிறுவப்படும்

வழக்குகளுக்குத் தீர்வுகாண கேரளத்தில் ஏற்பாடு

திருவனந்தபுரம், ஜூன் 10—

எங்கெங்கு தீர்க்கப்படாத வழக்குகள் இருக்கின்றனவோ அவற்றிற்குத் தீர்வுகாணுவதற்கென மாவட்ட நீதிபதியின் தகுதி படைத்த ஒரு அதிகாரியை நியமிக்கப்போவதாக கேரள சட்ட மந்திரி வி. ஆர். கிருஷ்ண ஐயர் சட்டசபையில் கூறியிருக்கிறார்.

இப்போதுள்ள நீதிமன்றங்களின் அதிகார எல்லையைத் திருத்தி அமைப்பது பற்றியும், நியமிக்கப்படும் அந்த அதிகாரி சர்க்காருக்குத் திட்டங்கள் தருவார்—அத்துடன், தேவைப்படும் இடங்களில் மேலும் புதிய வழக்கு மன்றங்களைத் துவங்கவும் சர்க்கார் நடவடிக்கை எடுக்கும் என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

கேரளத்தில் புதிய மந்திரிசபை அமைந்ததின் நினைவாக சுமார் 180 குற்ற வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன என்றும், அவை எல்லாம் தொழில்—விவசாயத் தகராறுகளிலும், மற்றும் உயர் நீதிமன்றக் கிளை ஒன்று திருவனந்தபுரத்தில் நிறுவவேண்டும் என்ற கிளர்ச்சியினாலும் எழுந்தவை என்றும், இவற்றில் இரண்டொன்று அபாயகரமான தாக்குதல்கள் நடைபெற்றதற்காகக்கூட தொடுக்கப்பட்ட வழக்குகளாயிருக்கக்கூடும் என்றும் கூறியிருக்கிறார் மந்திரி.

முன்னுக்குப்பின் முரணுக உள்ளதாம்!

புகார் செய்வதில் அர்த்தமில்லையாம்!

பெங்களூர், ஜூன் 10—

"உணவுத் தானியங்கள் மீது விற்பனை வரி விதிக்கும் மாநிலங்கள், உணவுத் தானியங்களின் விலை உயர்ந்து விட்டது என்று புகார் செய்வதில் அர்த்தமில்லை; இப்படிச் சொல்வது முன்னுக்குப்பின் முரணுக உள்ளது"

என்று மத்திய உணவு அமைச்சர் ஜெயின் தெரிவித்துள்ளார்.

ஜோர்டான் - எகிப்து தகராறு முற்றுகிறது?

ஜோர்டானுக்கும் எகிப்திற்கும் இடையில் உறவுகள் நெருக்கடிக்காளாகியுள்ளன.

கெய்ரோவில் உள்ள தனது தூதுவரைத் திரும்ப அழைத்துக் கொள்ளுமாறு எகிப்து, ஜோர்டானைக் கேட்டிருப்பதாக அறிவித்திருக்கிறது.

இதற்கு முன்பாகவே, ஜோர்டான், அம்மானில் உள்ள எகிப்திய தூதுவரின் இராணுவ அதிகாரியையும், ஜெருசலத்திலுள்ள துணைத் தூதுவரையும் வெளியேறுமாறு கேட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.